# ‘நீங்கள் நலமா’ திட்டம்: பொதுமக்களிடம் அமைச்சர்கள் கருத்துக் கேட்கும் காட்சிகள்!



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ‘நீங்கள் நலமா’ திட்டத்தினை தொடங்கி வைத்ததை முன்னிட்டு நேற்று முன்தினம் (06.03.2024), நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள், முகாம் அலுவலகத்திலிருந்து அரசு திட்டங்களின் பயன்கள் குறித்து பொதுமக்களிடம் காணொலிக் காட்சி வாயிலாக தொடர்பு கொண்டு கருத்துகளை கேட்டறிந்தார். உடன் நீர்வளத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் சந்தீப் சக்சேனா, உள்ளார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ‘நீங்கள் நலமா’ திட்டத்தினை தொடங்கி வைத்ததை முன்னிட்டு, நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, நேற்று முன்தினம் (06.03.2024) சிந்தாதிரிப்பேட்டை, சென்னை குடிநீர் வாரியத்தின் தலைமை அலுவலகத்தில் உள்ள கண்காணிப்பு மற்றும் கட்டுப்பாட்டு அறையிலிருந்து அரசு திட்டங்களின் பயன்கள் குறித்து பொதுமக்களிடம் தொலைபேசியில் தொடர்பு கொண்டு கருத்துகளை கேட்டறிந்தார். உடன் உயர் அலுவலர்கள் உள்ளனர்.



நேற்று முன்தினம் (06.03.2024) முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ‘நீங்கள் நலமா’ திட்டத்தினை தொடங்கி வைத்ததை முன்னிட்டு, பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ. வேலு, தலைமைச் செயலகத்திலிருந்து அரசு திட்டங்களின் பயன்கள் குறித்து பொதுமக்களிடம் தொலைபேசியில் தொடர்பு கொண்டு கருத்துகளை கேட்டறிந்தார்.



தமிழ்நாடு மின்வாரியத் தலைமை அலுவலகத்தில் உள்ள மின்னகத்தில் நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு ‘நீங்கள் நலமா’ திட்டத்தின் கீழ் பயனாளிகளை தொடர்பு கொண்டு, தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் வாயிலாக பொது மக்களுக்கு வழங்கப்பட்டு வரும் மின் சேவைகள் குறித்து நேற்று முன்தினம் (06.03.2024) கருத்துகளை கேட்டறிந்தார். உடன் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ‘நீங்கள் நலமா’ திட்டத்தினை தொடங்கி வைத்ததை முன்னிட்டு நேற்று முன்தினம் (06.03.2024), கூட்டுறவுத்துறையின் மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்களால் பயன்பெற்ற தூத்துக்குடி, காஞ்சிபுரம், சேலம், வேலூர், சென்னை ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த பயனாளிகளை கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் திருப்பத்தூரிலுள்ள முகாம் அலுவலகத்திலிருந்து தொலைபேசி வாயிலாக நேரடியாக தொடர்பு கொண்டு நலத்திட்டங்கள் குறித்த கருத்துகளைக் கேட்டறிந்தார்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ‘நீங்கள் நலமா’ திட்டத்தினை தொடங்கி வைத்ததை முன்னிட்டு, உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர. சக்கரபாணி நேற்று முன்தினம் (06.03.2024) திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் முகாம் அலுவலகத்திலிருந்து அரசு திட்டங்களின் பயன்கள் குறித்து பொதுமக்களிடம் தொலைபேசியில் தொடர்பு கொண்டு கருத்துகளை கேட்டறிந்தார்.



முதலமைச்சர் அவர்கள் நேற்று முன்தினம் (06.03.2024) தொடங்கி வைத்த ‘நீங்கள் நலமா’ திட்டத்தை முன்னிட்டு பயனாளிகளைத் தொடர்பு கொண்டு துறை ரீதியான நலத்திட்டங்கள் குறித்த கருத்துக்களை கேட்டறியும் திட்டமாகும். அதன் தொடர்ச்சியாக அமைச்சர் மா.சுப்பிரமணியன் அவர்கள் இன்று. சென்னை ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் உள்ள தமிழ்நாடு அரசு பன்னோக்கு உயர் சிறப்பு மருத்துவமனை கூட்டரங்கில் நடைபெற்ற நிகழ்வில் சிகிச்சை பெற்று குணமடைந்தவர்களை தொலைபேசியில் அழைத்து நலம் விசாரித்து அவர்கள் தேவை குறித்து கேட்டறிந்தார்கள்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ‘நீங்கள் நலமா’ திட்டத்தினை தொடங்கி வைத்ததை முன்னிட்டு, தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாகராஜன் நேற்று முன்தினம் (06.03.2024), சென்னை முகாம் அலுவலகத்திலிருந்து அரசு திட்டங்களின் பயன்கள் குறித்து பொதுமக்களிடம் தொலைபேசியில் தொடர்பு கொண்டு கருத்துகளை கேட்டறிந்தார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ‘நீங்கள் நலமா’ திட்டத்தினை தொடங்கி வைத்ததை முன்னிட்டு, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறையின் மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்களால் பயன்பெற்ற சென்னை, செங்கல்பட்டு, கடலூர், ஈரோடு, நீலகிரி, திருநெல்வேலி மாவட்டங்களைச் சேர்ந்த பயனாளிகளை தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி. கணேசன் தொலைபேசி வாயிலாக நேரடியாக தொடர்பு கொண்டு நலத்திட்டங்கள் குறித்த கருத்துக்களைக் கேட்டறிந்தார்.

## போதைப் பொருட்கள் எங்கிருந்து தமிழ்நாட்டிற்கு வருகின்றன?

# பிரதமரே, முதலில் உங்கள் நோயைக் குணப்படுத்திக் கொள்ளுங்கள்!

### திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி ஆதாரப்பூர்வமான பதிலடி!

சென்னை, மார்ச் 8-

தமிழ்நாட்டில்தான் போதைப் பொருள்கள் கடத்தல் அதிகம் என்று சென்னையில் பிரதமர் மோடி பேசியுள்ளார். தமிழ்நாட்டிற்கு இவை எங்கிருந்து வருகின்றன? மாநிலங்களவையில் உள்துறை அமைச்சகம் அளித்த போதைப் பொருள் அதிகமாகக் கடத்தும் மாநிலங்களின் பட்டியலில் தமிழ்நாடு இல்லையே! போதைப் பொருள் கடத்தப்படுவதைத் தடுக்க தமிழ்நாடு அரசு உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டுதான் வருகின்றது. உண்மை இவ்வாறு இருக்க, பிரதமர் உண்மைக்கு மாறாகப் பேசலாமா? பிரதமர் மோடி அவர்களே, முதலில் உங்கள் நோயைக் குணப்படுத்திக் கொள்ளுங்கள் என்று திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள் அறிக்கை விடுத்துள்ளார்.

இதுகுறித்து அவரது அறிக்கை வருமாறு:-

4-3-2024 அன்று சென்னையில் தரம் தாழ்ந்து பேசிய பிரதமர் மோடி,

“தி.மு.க. அரசின் ஆதரவால்தான் தமிழகத்தில் போதைப் பொருள்கள் வியாபாரம் செழித்து வருகிறது.

என் மனதை அரிக்கும் கவலையை உங்களோடு பகிர்ந்து கொள்கிறேன். தமிழகத்தைச் சேர்ந்த பெற்றோர் மனதிலும் ஆழ்ந்த கவலை உள்ளது.

ஆட்சி அதிகாரத்தில் இருக்கும் கட்சியின் ஆதரவில், தமிழகத்தில் போதைப் பொருள்கள் தடையின்றி, அனைத்து இடங்களிலும் புழங்கி வருகிறது என்பது தான் என் மனதை உருக்கும் கவலை.... இது அபாயத்தின் அறிகுறி, தமிழகத்தின் எதிரிகள்மீதான நடவடிக்கை, மேலும்விரைவுபடுத்தப்படும்.

இது மோடி அளிக்கும் “கியாரண்டீ”



**போதைப் பொருள்கள் எங்கிருந்து வந்தன?**

நன்றி! பிரதமர் மோடி அவர்களே, இந்தக் கொடுமையான போதைப் பொருள்கள் தமிழ்நாட்டிற்கு எங்கிருந்து வந்தன - வருகின்றன என்பதை அறிந்துகொள்ள, அனைத்து மாநிலங்களையும் ஆளும் பிரதமர், உள்துறை அமைச்சர் போன்ற ஒன்றியப் பொறுப்பிலிருக்கும் உங்களைப் போன்ற “மனதை உருக்கும் கவலை” - எங்களுக்கும், தமிழ்நாட்டவருக்கும் இருப்பதால் பதில் கூறுங்கள்.

விமான நிலையங்கள், கப்பல் துறைமுகங்களில் யாருடைய அதிகாரங்கள் உள்ளன என்றாலும், போதைப் பொருள்கள் தமிழ்நாட்டிலேயே தயாரிக்கப்படுகின்றனவா? தயாரிக்கப்பட்டு விநியோகிக்கப்படுகின்றனவா? வெளிநாட்டு, பன்னாட்டு மாஃபியாக்கள் மூலம்தானே கோடி கோடியாக உள்ளே நுழைகின்றன!

பல்லாயிரக்கணக்கான கோடி ரூபாய் மதிப்புள்ள போதைப் பொருள்கள் தங்களது “டபுள் எஞ்ஜின்” நிர்வாகம் நடத்தும் குஜராத்திலிருந்துதான் இந்திய நாட்டின் மாநிலங்களுக்குள் நுழைந்து மக்களை சீரழிக்கின்றன என்ற தகவல்கள் பொய்யா, மெய்யா?

**உள்துறை அமைச்சகம் ஒப்புக்கொண்ட உண்மைகள்!**

1.2023 டிசம்பர் 13 அன்று மாநிலங்களவையில் ஒன்றிய உள்துறை அமைச்சகம் தெரிவித்த விவரங்களின் அடிப்படையில், குஜராத், ராஜஸ்தான், பஞ்சாப், மத்தியப் பிரதேசம், ஜார்க்கண்ட், மணிப்பூர், உத்தரப் பிரதேசம், அரியானா ஆகிய மாநிலங்கள் போதைப் பொருள்கள் கடத்தப்படுவதில் முதன்மை இடத்தில் உள்ளன. இந்த மாநிலங்களோடு ஒப்பிடும்போது தமிழ்நாட்டில் போதைப் பொருள் புழக்கம் குறைவானதே! என்றாலும், அதை ஒழிக்கத் தமிழ்நாடு தி.மு.க. அரசு இடையறாத முயற்சியை மேற்கொள்ளத் தவறியது உண்டா?

பெரிதும் போதைப் பொருள்கள் இந்தியாவிற்குள் ஊடுருவுவது குஜராத்தில் உள்ள முந்த்ரா துறைமுகம் வழியாகத்தான் என்று ஊடகங்களில் வந்த செய்தித் தொகுப்புகள் - தரவுகள் அருகில் தரப்பட்டுள்ளன. குஜராத் முந்த்ரா துறைமுகம் யாருடையது?

இந்தியாவின் “பிரபல ஏழையான” அதானியின் துறைமுகம்!

அந்த அதானி யார்? நம்முடைய பிரதமர் மோடிக்கு மிக நெருக்கமானவர்; அவருடன் சேர்ந்து அவரது விமானத்திலேயே செல்லும் அரிய வாய்ப்புப் பெற்றவர்!

‘நடவடிக்கை’ எடுக்கவில்லையா? நாங்கள், எடுத்தது செய்திதானே என்று பதில் கூறலாம்!

அதே பதில் உங்களுக்கு மட்டும்தானா?

**அரசு ஆக்கரீதியாக செயல்படவில்லையா?**

தமிழ்நாட்டு தி.மு.க. அரசும், முதலமைச்சரும், காவல்துறையும் வேடிக்கை பார்த்துக் கொண்டு சும்மா இருக்கவில்லையே! இது பற்றி தமிழ்நாடு (தி.மு.க.) அரசின் சட்ட அமைச்சர் ரகுபதி அவர்கள் தெளிவான விளக்கம் தந்துள்ளாரே!

“1.போதைப் பொருள்களைத் தடுப்பதற்காக 10.8.2023 அன்று மாநில அளவிலான காவல்துறை அதிகாரிகளின் கூட்டத்தைக் கூட்டி, இத்தகைய போதைப் பொருள்கள் தமிழ்நாட்டில் இருக்கக் கூடாது என்பதற்கான நடவடிக்கையை முதலமைச்சர் எடுத்தார்.

2. கடந்த அ.தி.மு.க. ஆட்சிக்காலத்தில் அமைச்சரே குட்கா வியாபாரத்தில் உடந்தையாக இருந்தார் எனக் குற்றம் சாட்டப்பட்டது. அமைச்சராக இருந்தவர்மீதும், மற்ற அதிகாரிகள் மீதும் வழக்குத் தொடருவதற்கான கோப்பு நீண்ட நாள் தமிழ்நாடு ஆளுநரிடமிருந்தது - பிறகு, அவர் (சில காலம் முன்புதான்) வழக்குத் தொடர அனுமதி அளித்துள்ளார்! அதுமட்டுமா?

**கஞ்சா கடத்தியவர்களை வரவேற்பது பா.ஜ.க.தானே!**

தி.மு.க.வில் இருந்த ஒருவர் சம்பந்தப்பட்டதாக விசாரணை நடப்பதாலேயே அக்கட்சிமீது பழி சுமத்தி விடுவது நியாயமா? அவரை உடனே கட்சியிலிருந்து விலக்கி, நடவடிக்கை எடுக்க தி.மு.க. தலைமை தயங்கவில்லையே!

தமிழ்நாட்டில் கஞ்சா கடத்தல், போதைப் பொருள் விற்பனைத் தொழில்களில் ஈடுபட்டவர்களை சிவப்புக் கம்பளம் விரித்து, பா.ஜ.க. தனது கட்சியில் சேர்த்துக் கொண்டது.

இப்படி தி.மு.க.மீது பழி போட்டு, தேர்தல் வாக்குகளை வாங்க குறுக்குவழி தேடலாமா?

தமிழ்நாட்டில் பா.ஜ.க. கூட்டணி உடைந்தது மட்டுமல்லாமல், புதிதாக எவரும் அக்கூட்டணிக்கு வரவும் தயாராக இல்லை; பிரதமர் மோடி நான்கு முறை தமிழ்நாட்டிற்கு வந்தும் இந்நிலையே என்கிற கோபத்தாலும், தேர்தல் தோல்வி என்ற பயத்தாலும் இப்படி ஜன்னி கண்டவர் போல் பிதற்றுவது, அவர் வகிக்கும் பிரதமர் பதவிக்கு அழகா? யோசிக்கவேண்டும்!

**உங்கள் நோயைக் குணப்படுத்திக் கொள்ளுங்கள்!**

ஆங்கிலத்தில் ஒரு பழமொழி உண்டு - தனது குஜராத் நடப்புகளை மறந்துவிட்டு, இப்படி தமிழ்நாட்டைப் பார்க்கிற பிரதமர் மோடியிடம், “மருத்துவரே உங்கள் நோயைக் முதலில் குணப்படுத்திக் கொள்ளுங்கள்” என்றுதான் தமிழ்நாட்டவர் கூறுவர்.

இவ்வாறு திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி தமது அறிக்கையில் அவர்கள் தெரிவித்துள்ளார்.



மதுரை மாநகர் மாவட்ட தி.மு.க. தகவல் தொழில்நுட்ப அணி சார்பில் பிரதமர் மோடி பொய் பிரச்சாரம் மட்டுமே செய்கிறார் என்பதை பொதுமக்களுக்கு எடுத்துரைக்கும் வகையில் தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் பாலகிருஷ்ணன் தலைமையில் மோடி வாயால் வடை சுடுகிறார் என்ற தலைப்பில் மாநில தணிக்கை குழு உறுப்பினர் வ.வேலுசாமி மோடியின் முகமூடி அணிந்து வடையுடன் பொதுமக்களுக்கு துண்டு பிரசுரம் விநியோகம் செய்து பிரச்சாரம் செய்தனர். உடன் கழக நிர்வாகிகள் தனச்செல்வம், ஒச்சு பாலு, முருகவேல், ஆர்.கணேசன், ரவீந்திரன், பாண்டி, செல்வி விஜயலட்சுமி பாண்டியன் பகுதி செயலாளர்கள் அறிவு நிதி, குரும்பன், பி.கே.செந்தில்,காவேரி, சு.பா. கண்ணன், ராதாகிருஷ்ணன், அன்வர் எஸ்.எஸ்.மாறன், ஆர்.எம்.முத்து மற்றும் வெள்ளத்துரை, வட்டச் செயலாளர்கள் காத்தவராயன், வி.சி மாதவன், பி எம் மருது, ஆர்.ஆர்.மகேந்திரன், ராஜேஷ் கண்ணா, மாயம்பெருமாள் மாவட்டத் துணை ஒருங்கிணைப்பாளர்கள் சந்திரகாசன் தண்டபாணி, ஹரிஷ் குமார், ஜெயபிரகாஷ் தமிழ்ச்செல்வி மற்றும் பலர் கலந்து கொண்டனர்

---

## திருநெல்வேலி மத்திய மாவட்டம்

# திருநெல்வேலி மாநகரம், பாளையங்கோட்டை பகுதி, 33வது வட்டக் கழகப் பொறுப்பாளர் நியமனம்!

## தலைமைக் கழக அறிவிப்பு

திருநெல்வேலி மத்திய மாவட்டம், திருநெல்வேலி மாநகரம், பாளையங்கோட்டை பகுதி, 33வது வட்டச் செயலாளர் சுப்ரீத் (எ) சுப்பிரமணியன் அவர்களை, அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்குப் பதிலாக, கழகப் பணிகள் செவ்வனே நடைபெற **பா.தளவாய்** (49ஏ, பெருமாள் மேலரத வீதி, பாளையங்கோட்டை, திருநெல்வேலி) அவர்கள் 33வது வட்டக் கழகப் பொறுப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட வட்டக் கழக அமைப்பின் பிற நிர்வாகிகள் இவருடன் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**“அண்ணா அறிவாலயம்”**
சென்னை - 18
நாள்- 7.3.2024

**துரைமுருகன்**
பொதுச்செயலாளர்
தி.மு.க.

---

## தருமபுரி மேற்கு மாவட்டம்

# தருமபுரி கிழக்கு, தருமபுரி வடக்கு, தருமபுரி தெற்கு ஆகிய ஒன்றியங்களில் அடங்கியுள்ள ஊராட்சிகள் மற்றும் ஒன்றியக் கழகப் பொறுப்பாளர் நியமனம்!

## தலைமைக் கழகம் அறிவிப்பு

கழக நிர்வாக வசதிக்காகவும்-கழகப் பணிகள் செவ்வனே நடைபெற்றிடவும் தருமபுரி மேற்கு மாவட்டம், பாப்பிரெட்டிப்பட்டி சட்டமன்றத் தொகுதியில் அடங்கியுள்ள தருமபுரி கிழக்கு, தருமபுரி வடக்கு மற்றும் தருமபுரி கிழக்கு மாவட்டத்தில் உள்ள தருமபுரி மேற்கு ஒன்றியத்திலிருந்து, பாப்பிரெட்டிப்பட்டி சட்டமன்றத்திற்குள் வரும் **3 ஊராட்சிகள் சேர்த்து, தருமபுரி கிழக்கு, தருமபுரி வடக்கு, தருமபுரி தெற்கு** ஆகிய 3 ஒன்றியக் கழகங்களாக மாற்றியமைக்கப்பட்டு பிரிக்கப்படுகிறது.

அவ்வாறு மாற்றியமைக்கப்பட்டு, பிரிக்கப்பட்ட ஒன்றியங்களில் ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்டு பணியாற்றி வரும் தருமபுரி கிழக்கு, தருமபுரி வடக்கு ஆகிய ஒன்றியச் செயலாளர்கள் தொடர்ந்து அப்பொறுப்பு வகிப்பார்கள். புதியதாக பிரிக்கப்பட்ட தருமபுரி தெற்கு ஒன்றியக் கழகப் பணிகள் செவ்வனே நடைபெற கீழே குறிப்பிடப்பட்டுள்ளவர் ஒன்றியப் பொறுப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

அவ்வாறு மாற்றியமைக்கப்பட்டு, பிரிக்கப்பட்ட **தருமபுரி கிழக்கு, தருமபுரி வடக்கு, தருமபுரி தெற்கு** ஆகிய ஒன்றியங்கள் பின்வரும் ஊராட்சிகள் மற்றும் பேரூர்கள் கொண்டதாக அமையும்.

**தருமபுரி கிழக்கு ஒன்றியம்:** ஊராட்சிகள்-1.முக்கல் நாயக்கன்பட்டி, 2. நல்லசேன அள்ளி, 3.உங்கரான அள்ளி, 4.நூல அள்ளி, 5.செட்டிக்கரை, 6.கொண்டகரஅள்ளி, 7.திப்பிரெட்டிஅள்ளி, 8.வே.முத்தம்பட்டி, 9.கோடுஅள்ளி ஆகிய 9 ஊராட்சிகள்.

**தருமபுரி கிழக்கு ஒன்றியம்**

செயலாளர் : **கே.பி.சக்திவேல்**
1/60, மாரியம்மன் கோவில் தெரு,
கவலைக்காரன்கொட்டாய்,
அன்னசாகரம் அஞ்சல்,
தருமபுரி மாவட்டம்- 636 704.

**தருமபுரி வடக்கு ஒன்றியம்:**

ஊராட்சிகள்- 1.மூக்கனூர், 2.அக்கமனஅள்ளி, 3. நாயக்கனஅள்ளி, 4.குப்பூர், 5.வெள்ளோலை, 6. கொண்டம்பட்டி, 7.வெள்ளாளப்பட்டி ஆகிய 7 ஊராட்சிகள்.

செயலாளர் : **என்.ஏ.மாது**, எ.நடுப்பட்டி,அக்கண அள்ளி அஞ்சல்,தருமபுரி வட்டம் & மாவட்டம்-636 704.

**தருமபுரி தெற்கு ஒன்றியம்:**

ஊராட்சிகள் - 1.கே.நடுஅள்ளி, 2. அளேதருமபுரி, 3.செம்மாண்டகுப்பம், 4.ஆண்டிஅள்ளி, 5.கிருஷ்ணாபுரம், 6.புழுதிக்கரை, 7.கோணங்கிநாயக்கன அள்ளி ஆகிய 7 ஊராட்சிகள்.

**தருமபுரி தெற்கு ஒன்றியம்**

பொறுப்பாளர் : டாக்டர் எம்.பிரபு ராஜசேகர், சின்னேரி மோட்டுப்பட்டி கிராமம்.புழுதிக்கரை அஞ்சல், தருமபுரி மாவட்டம் -635 202.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 7.3.2024

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.